உ
சிவமயம்

# செய்திக்கடிதம்

மரம் - 3 கிளை - 2

கூரை தான் வேண்டாது
கொலு வீற்றிருக்கும் தாயே!
கூப்பிட்ட குரலுக்கு வந்து
குறை தீர்ப்பவள் நீயே!

வீசிடும் கண் பார்வையில்
வீழ்ந்திடும் பகையெல்லாம்.
வெக்காளி உன் அருளினால்
விளைந்திடும் நன்மையெல்லாம்.

-சித. அருணாசலம்.

**2005/02** **10/04/2005**

பொருளடக்கம்


1. தலைவர் உரை.
2. ஆசிரியர் உரை.

**நிறைவேறிய நிகழ்ச்சிகள்**

1. கதை சொல்லும் கலை.
2. சிப்பந்திகள் விருந்து
3. உல்லாசச்சுற்றுலா
4. ஆண்டவர் குரு பூஜை விழா.
5. தைப்பூச விருந்து

**நடை பெறவிருக்கும் நிகழ்ச்சிகள்**

1. யோகா - ஒரு அறிமுகம்
2. பர்மா பயணம
3. ஆச்சிமார் உபயம்
4. அறிவுத்திறன் போட்டி
5. கலை விழா.

**நகரத்தார் பக்கம்.**

1. குறுக்கெழுத்துப் போட்டி
2. நாம் எங்கே போகிறோம்
3. கதை சொல்லும் கலை
4. இன்பச் சுற்றுலா
5. பிறந்த நாள், இன்று பிறந்த நாள்
6. கட்டடக் கலையில் நகரத்தார்
7. வாழ்க்கைக் கல்வி

**இதர செய்திகள்.**

1. கூட்டுப் பிரார்த்தனை
2. ஆண்டுச் சந்தா செலுத்துதல்
3. அறிவிப்புகள்
4. திருமணம் மற்றும் பிறப்பு
5. முகவரி மாற்றம்
6. புது உறுப்பினர்கள்
7. வரி விளம்பரங்கள்



*செய்திக்கடிதம்*
15A, தேங்க் ரோடு
சிங்கப்பூர் 238065.
தொலைபேசி எண்: 67379393.
http://www.sttemple.com
http://www.singainagarathar.com

# <u>தலைவர் உரை</u>

அன்புடையீர், வணக்கம்.

இந்த ஆண்டின் இரண்டாவது செய்திக்கடிதத்தின் வழி உங்களுடன் என் எண்ணங்களைப் பகிர்ந்து கொள்வதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

"மாதம் ஒரு நிகழ்ச்சி" ஏற்பாடு செய்து அதில் நம்மவர்கள் பங்கேற்றுப் பயன் பெறும்படி செய்வதைச் சங்கத்தின் நோக்கமாகக் கொண்டோம். அதன்படி தைப்பூசத்திற்குப் பிறகு இரண்டு நிகழ்ச்சிகள், **'கதை சொல்லும் கலை'**யும் **'இன்பச் சுற்றுலா'**வும் சிறப்பாக நடந்து முடிந்துள்ளன. இரண்டு நிகழ்ச்சிகளுக்கும் தாங்கள் அளித்த பேராதரவு, எங்களைப் பிரமிக்க வைத்ததுடன், இனி வரும் நிகழ்ச்சிகளை இதை விடச் சிறப்பாகச் செய்ய வேண்டியதன் அவசியத்தையும் எங்களுக்கு உணர்த்தியது. இவ்விரு நிகழ்ச்சிகளுக்கும் ஆதரவும், ஒத்துழைப்பும் நல்கிய நகரத்தார் பெருமக்கள் அனைவருக்கும் எங்கள் மனமார்ந்த நன்றி.

இது போன்ற நிகழ்ச்சிகளில் ஏன் பங்கேற்க வேண்டும்? சற்றே ஆராய்ந்தால், நம்மால் பல நன்மைகளைப் பட்டியலிட முடியும்.

- புதிய தொடர்புகள், நட்புறவுகள் ஏற்படும் வாய்ப்பு
- பழைய தொடர்புகள், மற்றும் சொந்தங்களை பலப்படுத்திக் கொள்ளும் வாய்ப்பு
- பயனுள்ள கருத்துப் பரிமாற்றங்கள், அனுபவங்கள்
- நமக்குள்ளே ஒளிந்திருக்கும் திறமைகளை வெளிக் கொணர ஒரு வாய்ப்பு
- கடின உழைப்புக்கு இடையே ஒரு இனிய ஓய்வு
- ஒரு கூட்டுப் பயிற்சி
- நம் பிள்ளைகளுக்கு பள்ளி நண்பர்கள் மட்டுமின்றி நகரத்தார் நண்பர்ளை ஏற்படுத்திக் கொள்ளும் வாய்ப்பு. அவர்களுடைய நட்பே வருங்காலத்தில் நமது சமூகமும், அதன் தனித்துவமும் பாதுகாக்கப் பட உதவும்.

இப்படி அடுக்கிக் கொண்டே போகலாம். இன்றைய வாழ்க்கை மன உளைச்சல் மிகுந்ததாக இருக்கிறது. ஆண், பெண் இரு பாலருமே மனித இயந்திரங்களாகவே மாறி வருவதைப் பார்க்கிறோம். இயந்திர மயமான வாழ்க்கைக்கு ஒரு இடைவேளை வேண்டும். சமூகத்துடன் இன்னும் அதிகமாக நம்மைப் பிணைத்துக் கொள்ள வேண்டும். எனவே உங்கள் சின்னஞ் சிறு உலகத்தில் இருந்து கொஞ்சம் வெளியே வாருங்கள். பலருடனும் பழகுங்கள்!

இனி வரும் நிகழ்ச்சிகளுக்கும் தொடர்ந்து உங்கள் பேராதரவையும், ஒத்துழைப்பையும் நல்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். உங்கள் அனைவருக்கும் என் இனிய தமிழ்ப்புத்தாண்டு வாழ்த்துக்கள்.

நன்றி
**அரு. கருப்பையா**
தலைவர்.



# <u>ஆசிரியர் உரை</u>

வணக்கம் வாசகர்களே!

நடந்து முடிந்த உல்லாசச் சுற்றுலாவில் தமிழ்ப் புத்தகங்களைப் பரிசாகப் பெற்ற நம் சிறார்கள் தமிழை வாசிப்பார்கள். வாசிப்பதை நேசிப்பார்கள் என்பது திண்ணம்.

தலைமுறை, தலைமுறையாக நம்மவர்கள் செய்து வந்தது தனவணிகத் தொழில். படிப்பறிவு அதிகமில்லாவிட்டாலும் பாய்மரம் ஏறிப் பல நாடுகளுக்கும் சென்று வட்டித் தொழில் செய்து நாணயமாகச் சம்பாதித்தவர்கள் நம் முன்னோர்கள். அசலைப் பெருக்கி எளிமையாக வாழப் பழகியவர்கள்.

ஆனால் இன்று நம் நிலைமை வேறு. நமது இனத்தவர்கள் படிப்பறிவு மிக்கவர்களாகவும், தொழில்நுட்பத் திறன் உள்ளவர்களாகவும் மாறி வருகிறார்கள். வருமானம் அதிகமாகிய காரணத்தால் ஆடம்பரமாக வாழவும் பழகி விட்டார்கள். தங்களது பணப்பையில் ஐந்தாறு கடன் அட்டைகள் தலைநீட்டுவதைப் பெருமையாகக் கருதுகிறார்கள்.

"Credit Card" - தமிழில் கடன் அட்டை. பையில் பணம் இல்லாவிட்டாலும் நினைத்ததை வாங்க வைக்கும் மந்திர அட்டை. ஆரம்பத்தில் ஆனந்தத்தைக் கொடுத்தாலும், அசலுடன் வட்டி சேர்த்து பணத்தைக் கட்டும்படி வங்கிகள் வற்புறுத்தும் போது தான் அதன் வலி புரிய ஆரம்பிக்கும். எனவே ஆரம்பத்திலேயே முன் எச்சரிக்கையுடன் சிந்தித்து நடந்தால் தொல்லைகள் குறையும். விளக்கைச் சுற்றிப் பறக்கும் விட்டில் பூச்சியின் கதி நமக்கு வந்து விடாமல், நம்மை நாமே காத்துக் கொள்ளலாம்.

நம் முன்னோர்கள் நமக்குக் கற்பித்த சிக்கனம் எனும் பாடத்தை சிக்கெனப் பிடித்துக் கொள்வோம். சிறப்பாக வாழ்வோம்.

**மங்கையர்க்கரசி செல்லப்பன்,**
ஆசிரியர்.

வாசகர்களிடமிருந்து கதை, கட்டுரை மற்றும் கவிதைகளை வரவேற்கிறோம். நமது திறமைகளை வளர்த்துக் கொள்ள இது ஒரு சிறந்த வாய்ப்பு.

**- ஆசிரியர் குழு.**

# நிறைவேறிய நிகழ்ச்சிகள்

1) **கதை சொல்லும் கலை (26-02-005)** ;-

வெற்றிகரமாக முடிந்த இந்த நிகழ்ச்சி முழுவதும் ஒளி/ஒலிப்பதிவு செய்யப்பட்டு வட்டு வடிவில் வெளி வந்துள்ளது. DVD வட்டு - $10, VCD வட்டு - $8. கீழ்க்கண்டவர்களிடம் கிடைக்கும்.

| | |
|---|---|
| திருமதி. அன்னம் ஆறுமுகம் | 94576084 |
| திருமதி. நல்லம்மை செந்தில் | 64826334 |

2) **சிப்பந்திகள் விருந்து (05-03-05)** :-

சென்ற 05-03-05 அன்று இரவு 08.00 மணிக்கு, கோயில் சிப்பந்திகளுக்கு, தொண்டர் குழு சார்பாக விருந்து அளிக்கப்பட்டது.

3) **உல்லாச சுற்றுலா (13-03-05)** ;-

சென்ற 13-03-05 அன்று பாசிர் ரிஸ் கடற்கரைப் பூங்காவிற்கு ஒரு நாள் உல்லாச சுற்றுலா ஏற்பாடு செய்யப் பட்டிருந்தது. காலை 08.30 மணிக்கு முதல் பேருந்து கிளம்பியதிலிருந்து களை கட்டத் தொடங்கிய உற்சாகம் மாலை 06.30 மணிக்கு திரும்பும் வரை சிறிதும் மாறாமல் இருந்தது. உறுப்பினர்களின் உணர்வு பூர்வமான ஈடுபாடு காரணமாக சுற்றுலா வெற்றிகரமாக முடிந்தது. இறைவனின் துணையோடு இயற்கையும் ஒத்துழைத்தது.

இந்த சுற்றுலா வெற்றிகரமாக நடை பெற பாடுபட்ட அனைவரையும் பாராட்டி நன்றி தெரிவித்துக் கொள்கிறோம். மேலும் இந்த நிகழ்ச்சியின் பல்வேறு அங்கங்களுக்கு பணமும், பொருளும் வழங்கியவர்களுக்கும்; இனிப்பு மற்றும் பலகாரம் வழங்கியவர்களுக்கும்; பேருந்து ஏற்பாடு செய்து தந்தவர்களுக்கும் மற்றும் எல்லாவித உதவிகளையும் செய்தவர்களுக்கும் நகரத்தார் சங்கத்தின் சார்பில் நன்றி தெரிவித்துக் கொள்கிறோம். ஸ்ரீ தெண்டாயுதபாணி கோவிலில் இருந்து ஒலி அமைப்பு, மேசை மற்றும் தேவையான பொருள்களை வழங்க ஏற்பாடு செய்த மேலாண்மைக்குழுத் தலைவர் திரு லெ.நா. சுப்பையா செட்டியார் அவர்களுக்கும் எங்கள் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

4) **ஆண்டவர் குரு பூஜை விழா (25-03-05)** :-

கோவிலூர் ஆண்டவர் குருபூஜை விழா, மதிய உணவு அன்னதானத்துடன் சிறப்பாக நடந்தேறியது.

5) **தைப்பூச விருந்து (03-04-05)** :-

தைப்பூச விழாவை ஒருங்கிணைந்து சிறப்பாக நடத்திய நகரத்தார்களுக்கு நன்றி தெரிவிக்கும் விதமாக 03-04-05 அன்று சைவ மற்றும் அசைவ உணவுகளுடன் நகர விருந்து கிட்டங்கி 1-A இல் அளிக்கப்பட்டது.



# நடை பெறவிருக்கும் நிகழ்ச்சிகள்

1) **யோகா - ஒரு அறிமுகம் (16-04-05)** :-

Nikam Guruji Yoga Kutir அமைப்பைச் சேர்ந்தவர்கள் ஏப்ரல் 16-04-05 அன்று மாலை 06.00 மணி முதல் இரவு 08.00 மணி வரை, யோகாவின் நன்மைகள் மற்றும் செயல்முறை விளக்கம், ஆகியவற்றைக் கேள்வி பதிலுடன் விளக்குகின்ற நிகழ்ச்சி நடைபெறும். இதற்குப் பதிவு செய்து கொள்ள வேண்டிய கடைசி நாள் 13-04-05. கீழ்க்கண்டவர்களிடம் பதிவு செய்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

| | |
|---|---|
| திருமதி. மீனா மணிசுப்ரமணியம் | 65647429 |
| திருமதி. முத்து தியாகராஜன் | 67957592 |
| திருமதி. ஜெயா அடைக்கலவன் | 65649347 |

நிகழ்ச்சி முடிந்தவுடன் இரவு உணவு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. முதலில் வரும் 100 பேருக்கு, ஒரு குடும்பத்திற்கு ஒன்று வீதம் அன்பளிப்புப் பைகள் வழங்கப்படும்.

2) **பர்மா சுற்றுப்பயணம் (29-04-05 -- 02-05-05)** :-

இன்பச்சுற்றுலா அன்று அறிவிக்கப்பட்ட வெளிநாட்டுப் பயணத்துக்கான ஏற்பாடுகள் மும்முரமாக நடைபெற்று வருகின்றன. பதிவு முடிந்து விட்டது. பதிவு செய்தவர்கள் ஏற்பாட்டாளர்களிடமிருந்து தகவல் வருவதற்காக காத்திருக்குமாறு கேட்டுக் கொள்ளப் படுகிறார்கள்.

3) **ஆச்சிமார் உபயம் (01-05-05)** :-

ஆச்சிமார் உபயம் மே மாதம் முதல் தேதியன்று சிறப்பாக நடைபெற உள்ளது. இரவு ஏழு மணியளவில் தீபாராதனையும், அதனைத் தொடர்ந்து சுவாமி புறப்பாடும் நடைபெறும். பின்னர் இரவு உணவு வழங்கப்படும். இவ்வருட உபயம் கீழ்க்கண்ட ஆச்சிமார்களின் மேற்பார்வையில் நடைபெற உள்ளது. அதற்கான பொருளுதவியை இவர்களிடம் அளிக்கலாம்.

| | |
|---|---|
| திருமதி. சரஸ்வதி கண்ணப்பன் | 67604295 |
| திருமதி. உண்ணாமலை முருகப்பன் | 63885197 |
| திருமதி. சீதா சுப்பையா | 62814127 |
| திருமதி. மீனா சண்முகம் | 64744407 |
| திருமதி. தேவகி ராமனாதன் | 62580621 |
| திருமதி. ராதா அருணாசலம் | 65656324 |
| திருமதி. ஸ்வர்ணா செல்வம் | 63144590 |

4) **அறிவுத்திறன் போட்டி (28-05-05)** :-

கலைவிழாவிற்கு முன்னோடியாக மே மாதம் 28-ம் தேதி மாலை 06.00 மணியளவில் பாலர் நிலை மாணவர்களுக்கு (Nursery, K1&K2) வண்ணம் தீட்டும் போட்டியும், P1 முதல் P3 வரை உள்ள ஆரம்ப நிலை

மாணவர்களுக்கு ஓவியப் போட்டியும், P4 முதல் P6 வரை உள்ள ஆரம்ப நிலை மாணவர்களுக்கு கட்டுரைப் போட்டியும், உயர் நிலை மாணவர்களுக்கு பேச்சுப் போட்டியும் (தலைப்பு முன்னதாகத் தரப்படும்) தொடக்கக் கல்லூரி மாணவர்களுக்கு பேச்சுப் போட்டியும் (தலைப்பு அந்த நேரம் தரப்படும்). மேற்கொண்ட போட்டிகளில் பங்கு கொள்ள விரும்புபவர்கள் கீழ்க்கண்டவர்களிடம் பதிவு செய்து கொள்ளவும்.

| | | |
|---|---|---|
| திருமதி. வள்ளிக்கண்ணு பழநியப்பன் | Nursery, K1 & K2 | 67645412 |
| திருமதி. கலையரசி வைரவன் | P1 to P3 | 67596712 |
| திருமதி. லதா முருகப்பன். | P4 to P6 | 68998232 |
| திருமதி. உமா சுப்ரமணியன் | Secondary | 65666964 |
| திருமதி. ஜெயமணி ராஜா | JC | 62715129 |

ஓவியம் மற்றும் வண்ணம் தீட்டும் போட்டிகளுக்கான வரைபொருட்களை, பங்கு பெறுபவர்களே கொண்டு வரவேண்டும். பதிவு செய்யக் கடைசி நாள் 21-05-05. பரிசுகள் கலை விழாவின் போது வழங்கப்படும்.

5) <u>கலை விழா (25-06-05)</u> :-

இந்த வருடம் கலை நிகழ்ச்சிகள் ஒரு நாள் விழாவாக, காலை முதல் இரவு வரை பல்வேறு புதுமையான அம்சங்களுடன், அனைத்து வயதினருக்கும் ஏற்ற வகையில், காலை, நண்பகல், இரவு உணவு மற்றும் மாலை பலகாரத்துடன் நடைபெறவிருக்கிறது. இதைப் பற்றிய விரிவான அறிக்கை அடுத்த செய்திக் கடிதத்தில் வெளிவரும். நடனப் போட்டி, பாட்டுப் போட்டி, மாறுவேடப் போட்டி, பட்டி மன்றம், கவியரங்கம் மற்றும் அரட்டை அரங்கம் போன்ற அங்கங்கள் இடம் பெறவிருக்கின்றன.



## நகரத்தார் பக்கம்.

### குறுக்கெழுத்துப் போட்டி 1 - விடைகள்

| | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | 2 செ | | | | | | | | | |
| | | | ய | | | ர் | த | நா | க | சி | தே 4 | |
| | | | ங் | | | த | | | | | | |
| | 1 ஆ | ட் | கொ | ண் | ட | நா | த | ர் | | | | |
| | வு | | ண் | | | ளி | | | | | | |
| | டை | | ட | | | ரொ | | | | | | |
| | ய | | சோ | | | ள | | 5 ச | | | | |
| | நா | | ழீ | | | 3 வ | டி | வு | டை | ய | ம் | மை |
| | ய | | ச | | | | | ந் | | | | |
| | கி | | ர் | | | | | 6 தி | ரு | வீ | ச | ர் |
| | | | | | 7 நி | | | ர | | | | ர |
| | | | | | த் | | | நா | | | | வ |
| | | | | | தி | | | ய | | | | சு |
| | | | 8 பெ | ரி | ய | நா | ய | கி | | | | டீ |
| | | | | | க | | | | | | | ண் |
| 10 சி | வ | 11 கா | ம | வ | ல் | லி | | 13 தா | | | | 9 க |
| வ | | மா | | | யா | | | ன் | | | | |
| பு | | ட் | | | ணி | | | தோ | | | | |
| ர | | சி | | | | | | ன் | | | | |
| ந் | | ய | | | | | | றி | | | | |
| தே | | ம் | | | | | | யீ | | | | |
| வி | | மை | | | | | | ச | | | | |
| | | | | 12 வா | டா | ம | ல | ர் | ம | ங் | கை 14 | |
| | | | | | | | | | | | லா | |
| | | | | | | | | 15 ம | ரு | தீ | ச | ர் |
| | | | | | | | | | | | நா | |
| | | | | | | | | | | | த | |
| | | | | | 16 ஐ | ந் | நூ | ற் | றீ | ச | ர் | |

# குறுக்கெழுத்துப் போட்டி - 2




**மேலிருந்து கீழ்:**

2) சிவபெருமானின் 63-வது திருவிளையாடல் நடைபெற்ற தலம்.
7) திருப்பூட்டும் மங்கலநாண்.
9) கொப்புடையம்மன் எழுந்தருளியுள்ள ஊர்.
11) ஆதீனம் உள்ளடக்கிய முருகன் குடி கொண்ட தலம்.

**இடமிருந்து வலம்:**

1) நகரக் கோயில்களில் ஒன்றன குடைவறைக் கோயில்.
3) நகரத்தார் வெளிநாடுகளுக்குச் சென்று தொழில் செய்த இடம்
4) செட்டிநாட்டுப் பலகாரங்களில் ஒன்று.
5) பர்மாவில் நகரத்தார் தொழில் செய்த ஊர்.
6) கடல் கடந்து சென்ற நகரத்தார் செய்த தொழில்.
8) செட்டிநாட்டரசரின் அரண்மனை உள்ள ஊர்.
10) நகரத்தார் வீடுகள் கட்ட அதிகமாகப் பயன்படுத்திய மரம்.

**கீழிருந்து மேல்:**

12) நகரத்தார் திருமணங்களில் சம்பந்தி வீட்டார் எழுதிக் கொள்வது.

- சித. அருணாசலம்.



## நாம் எங்கே போகிறோம்?

"மங்கையராய்ப் பிறப்பதற்கே மாதவம் செய்திடல் வேண்டும் அம்மா" என்றார் பாரதியார். அதிலும் நம் நகரத்தார் குலத்தில் நாம் பிறக்க என்ன தவம் செய்தோமோ என்று நான் பல முறை எண்ணி வியந்ததுண்டு. நம் நகரத்தார் பெருமைகள் ஒன்றா, இரண்டா நான் எடுத்துச் சொல்ல. நம் நகரத்தாரின் கட்டுக் கோப்பான வாழ்க்கை முறையைப் பார்த்து, நல்ல பழக்க வழக்கங்கள் வர நகரத்தார் வீட்டில் சில காலம் இருந்தால் போதும் என்று பலரும் சொல்லக் கேள்விப் பட்டிருக்கிறேன். ஆனால் நாமோ நமது கலாச்சாரத்தை மறந்து நம் பண்பாட்டையும் இழந்து வருகிறோம்.

எந்தக் குழந்தையும் நல்ல குழந்தை தான் மண்ணில் பிறக்கையிலே. அவன் நல்லவனாவதும், தீயவனாவதும் அன்னை வளர்ப்பினிலே. தாய்ப்பாலுடன் வீரத்தை ஊட்டிய ஓர் அன்னையே சத்ரபதி சிவாஜி உருவாகக் காரணமாயிருந்தார். உலகம் போற்றும் மகாத்மாவாக, மோகன்லால் கரம்சந்த் காந்தி உருவாக மூல காரணமாக இருந்தவர் அவரது அன்னையே. குழந்தை வளர்ப்பில் அன்னையரின் பங்கு எவ்வளவு முக்கியம் என்பதையே இவை நமக்குக் காட்டுகின்றன.

கட்டடம் உறுதியாக நிற்க அடித்தளம் வலுவாக அமைய வேண்டும். அது போல் குழந்தைகளின் எதிர்காலம் சிறப்பாக அமைய நல்ல பழக்க வழக்கங்கள், ஒழுக்கம் (Discipline) என்னும் அடித்தளம் பிஞ்சு மனதில் வலுவாகப் பதிய வேண்டும்.

கூட்டுக் குடும்ப அமைப்பு முறை பெரியவர்களுக்கு இடையே சஞ்சலங்களை ஏற்படுத்தினாலும் குழந்தைகள் அக்குடும்பத்தில் எல்லோரிடம் இருந்தும் நிறைய விஷயங்களைக் கற்றுக் கொள்ள முடியும். விட்டுக் கொடுத்துப் போகும் மனப்பான்மை ஏற்படும். ஆனால் இன்று குழந்தைகள் தனித்தனியே வளர்வதால் வாழ்க்கையின் நெளிவு, சுளிவுகளை எப்படிச் சமாளிப்பது என்று எதையும் கற்றுக் கொள்ள வாய்ப்பில்லை. விட்டுக் கொடுக்கும் தன்மையும் குறைந்து வருகிறது. பெற்றோருக்காகப் பிள்ளைகளும், பிள்ளைகளுக்காகப் பெற்றோரும் விட்டுக் கொடுத்துப் போவதால் வயதான காலத்திலும் சந்தோஷம் தொடர்ந்து கொண்டே போகும்.

எனவே, எதிர் காலத்தில் நம் நகரத்தார் சமூகத்தின் பெருமைகளைக் கட்டிக் காக்கவும், மேற்கத்திய கலாச்சாரத் தாக்கத்தின் சீரழிவுகளிலிருந்து எதிர்காலத் தலைமுறையைக் காக்கவும் நாம் என்ன செய்யப் போகிறோம் என்பது தான் இப்போது நம் முன்னே இருக்கும் பெரிய சவால்! அதை சமாளிக்கும் திறமையை நாம் வளர்த்துக் கொள்ள வேண்டும்.

**- திருமதி. மெய்யம்மை சாத்தப்பன்.**

# கதை சொல்லும் கலை

பிப்ரவரி 26, 2005 சனிக்கிழமை அன்று காலை 09.00 மணி, வருண பகவான் தனது கருணையை சற்று அதிகமாகவே காட்ட ஆரம்பித்து விட்டாரோ என்று எண்ணத் தோன்றிய மழை. சிறுவர் நிகழ்ச்சி என்பதால், பங்கேற்பு எப்படி இருக்குமோ என்கிற கவலை கொஞ்சம். 09.30 மணி அளவில் 6 குழந்தைகள் மட்டுமே வந்திருந்தனர். அவர்களுடன் நிகழ்ச்சி ஆரம்பிக்கப்பட்டது. ஆனால் சுமார் 10.00 மணியளவில், மழை தூறிக் கொண்டிருந்ததையும் பொருட்படுத்தாமல், பங்கேற்றவர்களின் எண்ணிக்கை 40 ஆக உயர்ந்தது. தங்களது பிள்ளைகளின் வளர்ச்சியில் பெற்றோருக்கு இருந்த ஆர்வத்தை இது காட்டியது. குழந்தைகளுக்கோ பெற்றோருடன் சேர்ந்து வெளியே வந்ததில் ஒரே மகிழ்ச்சி.

குழந்தைகள் தாங்கள் செய்வது இன்னதென உணரும் வகையிலும், கற்பனையில் அவற்றை நிறுத்தும் வகையிலும், சாதனங்கள் பயன்படுத்தப்பட்டன. மேலும் நிகழ்ச்சியில் பாவனையுடனான தமிழ், ஆங்கிலக் கதைகள் மற்றும் மழலைப் பாடல்கள் (Rhymes) சொல்லப்பட்டன. Tickle game உம் இடம் பெற்றது. எங்களது சொந்தத் தயாரிப்பான "Hot Dog, French Fries" பாடல் குழந்தைகளுக்கு மிகவும் பிடித்ததாகி விட்டது. செவிக்கு உணவில்லாத போது வயிற்றுக்கு ஸ்பிரிங் ரோல், கேக் மற்றும் குளிர் பானங்கள் வழங்கப்பட்டன. உடன் அன்பளிப்பு பைகளும் வழங்கப்பட்டன. நிகழ்ச்சி "Ring-a-Ring-a-Roses" விளையாட்டுடன் இனிதே முடிந்தது.

இந்தப் பயிற்சிப் பட்டறை வெற்றிகரமாக முடிந்தது, குழந்தைகளின் முகத்தில் தெரிந்த சந்தோஷம் மற்றும் ஆர்வத்தில் இருந்து தெரிந்தது. மலர்ந்து, காய்த்து, கனியவிருக்கின்ற மழலை மொட்டுக்களுடன் கலந்து பங்கெடுத்தது, அமைப்பாளர்களுக்கும் ஒரு புது அனுபவமாக இருந்தது. இதற்காக பொருளுதவி செய்தவர்களுக்கும், பாடுபட்டவர்களுக்கும் எங்களது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

-அன்னம் ஆறுமுகம்.

# இன்பச்சுற்றுலா - 2005

மார்ச் 13, 2005 ஞாயிற்றுக்கிழமை — மறக்க முடியாத ஒரு நாள். நமது சங்கம் ஏற்பாடு செய்திருந்த இன்பச் சுற்றுலாவுக்கான நாள். நானூற்றுச் சொச்சம் பேருக்குள் புதிய அனுபவங்களைப் புகுத்திய நாள்.

**பாசிர் ரிஸ் கடற்கரைப் பூங்கா** — பச்சைக்கம்பளம் விரித்தாற் போன்ற பரந்த புல்வெளியும், பக்கத்தில் அமைதியான கடலும், அதிகம் ஆர்ப்பரிக்காத அலைகளும், சுற்றிலும் நிழல் தரும் மரங்களும், நடுவே நாம் அமைத்திருந்த கொட்டகையும், இளவெயிலும், இதமான கடற்காற்றும் மனம் வருட வந்த மயிலிறகாய் மகிழ்வு தந்தன.



**துவக்கம்** - குறித்த நேரமான 9 மணியிலிருந்தே மக்கள் வரத் தொடங்கினர். ஸ்ரீ தெண்டாயுதபாணி கோவிலில் இருந்து மூன்று பேருந்துகள் ஏற்பாடு செய்யப் பட்டிருந்தன. சொந்த வாகனங்களிலும், பொதுப் பேருந்துகளிலும் கணிசமானோர் வந்திறங்கினர். வந்திருந்த ஒவ்வொரு குடும்பத்திற்கும் ஒரு கடற்கரை விரிப்பு (Beach Mat) நினைவுப் பரிசாக வழங்கப் பட்டது. தலைவர் திரு. அரு. கருப்பையா அவர்கள் எல்லோரையும் வரவேற்றுப் பேசுகையில் சுற்றுலாவின் நோக்கம் 'மனசே ரிலாக்ஸ்' என்றும், அனைவரும் எல்லா நிகழ்ச்சிகளிலும் பங்கு கொண்டு மகிழ்ச்சி அடைய வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்கள்.

**விதம்விதமாய் விளையாட்டுகள்** - சிறியவர் முதல் பெரியவர் வரை அனைவரும் பங்கேற்கும் வகையில் பல்வேறு புதிய விளையாட்டுகள் வடிவமைக்கப் பெற்றிருந்தன. 'இவரைத் தெரிந்து கொள்ளுங்கள்' என்ற முதல் விளையாட்டில் இருந்தே சுற்றுலா களை கட்டத் துவங்கியது.

தம்பதியருக்கு நடத்தப் பெற்ற ஆப்பிள் போட்டி மிகவும் விரும்பி ரசிக்கப் பட்டது. ஆச்சியும் செட்டியாரும் ஆப்பிளைக் கை தொடாமல் தமது நெற்றிகளுக்கு இடையில் இடுக்கிக் கொண்டு 50 மீட்டர் ஓடி வெற்றிக் கோட்டை அடைய வேண்டும். பலர் ஆப்பிளை விட்டுவிட்டு ஆச்சியைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டனர். ஆச்சியை விட்டுவிட்டு ஆப்பிளைப் பிடித்தவர்களும் இல்லாமலில்லை.

அபிநயப் போட்டிக்கு நிறைய வரவேற்பு இருந்தது. அதிகக் குழுக்கள் பங்கேற்றன. அபிநயித்த திரைப்படத்தின் பெயரை குழு உறுப்பினர்கள் கண்டுபிடித்த போதெல்லாம் அங்கு கரை புரண்டோடிய உற்சாகம் அளவிட முடியாததாக இருந்தது. பார்வையாளர்களும், பங்கேற்றோரும் ஒரு சேர ரசித்த நிகழ்ச்சியாக அது அமைந்தது.

ஆண்களுக்கும், பெண்களுக்கும் தனித்தனியாக கயிறு இழுக்கும் போட்டிகள் நடத்தப் பட்டன. ஒலிம்பிக் விளையாட்டுகளுக்கு ஈடான உற்சாகத்தையும், ஆரவாரத்தையும் இங்கே காண முடிந்தது.

இவை தவிர சிறுவர்களுக்கான எகிப்திய மம்மி ராப் (Mummy Wrap) போட்டி, சீனர்களின் சாப்ஸ்டிக்கை (Chop Stick) கையாளும் போட்டி முதலியவற்றையும் இங்கு குறிப்பிட்டாக வேண்டும்.

**அதிர்ஷ்டக் குலுக்கல்** அமோகமாய் நடந்தது. சோனி டி.வி.டி. இல்லக் கேளிக்கை சாதனம் (Sony DVD Home Theatre System) முதல் பரிசாக வழங்கப் பட்டது. அடுத்தடுத்த பரிசுகளாக தங்கம், வைரம், வெள்ளி, இரும்புப் பெட்டகம், இரண்டு சக்கர சைக்கிள் என்று பரிசுப் பட்டியல் நீண்டது. 'தங்கம், வைரம், வெள்ளி' என்பது முக்கிய விற்பனை வாசகமாகி எல்லோருடைய கவனத்தையும் ஈர்த்தது.

வந்தவர்களுக்கு காலையில் இனிப்பு, வடை, வெள்ளைப் பணியாரம், மற்றும் சூடான பானங்கள் வழங்கப் பட்டன. மதிய உணவு மகுடம் சூட்டியது போல

அமைந்தது. சைவமும், அசைவமும் ஒன்றையொன்று மிஞ்சின. வகைகளும் அதிகம்; சுவையிலும் குறைவில்லை என்பது பொதுவான கருத்தாக இருந்தது. மாலையில் கேக், முறுக்கு, மசாலைச் சீயம், மற்றும் சூடான பானங்கள் வழங்க ஏற்பாடு செய்யப் பட்டிருந்தது.

ஸ்ரீ தெண்டாயுதபாணி கோவில் மேலாண்மைக் குழுத் தலைவர் திரு லெ.நா. சுப்பையா செட்டியார் அவர்கள், நமது சங்கத் தலைவர் திரு. அரு. கருப்பையா அவர்கள், மற்றும் மூத்த நகரத்தார்களும் அதிர்ஷ்டக் குலுக்கு வெற்றியாளர்களுக்கும், பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கும் பரிசுகளை வழங்கி கவுரவித்தனர்.

நமது சங்கத்தின் துணைத் தலைவர் முனைவர் திரு. க. ஐங்கரன் அவர்கள் நன்றி உரை நிகழ்த்த மாலை மணி 6.30 அளவில் ஆறுமுகக் கடவுள் அருளால் இன்பச் சுற்றுலா இனிதே நிறைவு பெற்றது.

**பின் குறிப்பு:**

1. முந்தைய செய்திக் கடிதத்தில் அறிவித்திருந்தபடி மதிய உணவுடன் சமைக்காத காய்கறிகளும் (Salad) முளைகட்டிய பயிறு வகையும் வழங்கப் பட்டன.
2. வந்திருந்த அனைவருக்கும் தமிழில் அவரவர் பெயர் எழுதப் பட்ட ஒட்டு வில்லைகள் கொடுக்கப் பட்டிருந்ததால் பெரும்பாலோரை அடையாளம் கண்டு கொள்வது எளிதாக இருந்தது. பெயர் எழுதி ஒட்டப்பட்ட வில்லையுடன் ஒருவரை பல முறை சந்திக்க நேர்ந்த போது பெயரைப் பார்க்க முடிந்ததால் மறக்காமல் ஞாபகம் வைத்துக் கொள்ளவும் முடிந்தது.

- **ராம. வைரவன்**

## பிறந்த நாள்! இன்று பிறந்த நாள்!!!

சமீப காலங்களில் நாம் நம் குழந்தைகளின் பிறந்த நாளைக் கொண்டாடும் விதத்தையும், அதனால் குழந்தைகளுக்கு ஏற்படும் தாக்கத்தையும் அலசலாம் வாருங்கள்.

வாசலில் அழகப்பன் தம்பதியைப் பார்த்ததும், வலிந்து வரவழைத்த புன்னகையோடு வரவேற்றாலும் விசாலாட்சியின் மனதில், 'என்ன இது கையில் பெரிய பரிசுப் பொட்டலம் எதுவும் காணோமே?' என்று எண்ணம் ஓடியது. ஒருவேளை தங்க நகை ஏதாவது வாங்கி இருப்பாங்க, சின்னதா கைப்பையில் வச்சிருப்பாங்க, என்று தனக்குத் தானே சமாதானம் செய்து கொண்டாள்.

அடுத்து வந்த ராமசாமி மனைவியின் கையில் பெரிய பொட்டலத்தைப் பார்த்ததும் மனசுக்குள் ஒரு வெறுப்பு ஓடியது. ஆமா பெரிய பொட்டலம். உள்ள பிரிச்சுப் பார்த்தா பத்து வெள்ளிக்கு வாங்கின பிளாஸ்டிக் ரயில் பொம்மை இருக்கும். வட்ட வட்டமா தண்டவாளமும், நாலஞ்சு பெட்டியும் இருக்கும். நாலு நாள்ல புஸ்க்குன்னு நின்னுடும். தெரியாதா எனக்கு என்று ஏளனமாக நினைத்துக் கொண்டாள் விசாலாட்சி.



அன்று விசாலாட்சியின் ஏழு வயது மகன் நித்தீஷுக்குப் பிறந்தநாள். சனிக்கிழமை வைத்தால் தான் எல்லோராலும் வரமுடியும் என்று அன்றைய நாளைத் தேர்வு செய்து கணிசமாகச் செலவு செய்து பிறந்தநாள் கொண்டாட்டத்துக்கு ஏற்பாடு செய்திருந்தார்கள். அந்தா இந்தா என்று, எட்டரைக்கு, உண்மையும் பொய்யுமாய்ப் பல காரணம் கூறி,, அழைத்தவர்களில் எண்பது விழுக்காட்டினர் வந்து சேர்ந்தனர்.

உங்களுக்காகத் தான் காத்துக் கொண்டிருந்தோம், என்று எல்லோரிடமும் சொல்லி ஒரு வழியாக பிறந்தநாள் பாடல் பாடி ஏழு மெழுகுவர்த்தியை ஊதி அணைத்து, நித்தீஷ் கேக்கை வெட்டினான். விநியோகிக்கப் பட்ட கேக்கை சாப்பிட்டால் பிறகு பிரியாணிக்கு இடம் இருக்காதே என்று பலர் கேக்கைக் கையிலேயே வைத்துக் கொண்டார்கள். 'எனக்கு சுகரு' என்று ஒரு பாட்டி அப்படியே கேக்கை குப்பைத்தொட்டியில் போட்டதும், விசாலாட்சிக்கு மனதிற்குள் இடி இடித்தது. பையனோ வந்திருந்தவர்கள் கொண்டு வந்த பரிசுப்பொட்டலங்களை அப்பொழுதே பிரிக்க வேண்டும் என்று அடம் பிடித்து அதில் வெற்றியும் கண்டான்.

ஒவ்வொன்றாக எடுத்து, அவற்றை விமர்சனம் செய்யத் தொடங்கியதும், பலரின் முகங்கள் மலர்ந்தன, சிலரின் முகங்கள் சுருங்கின.

வந்திருந்த பரிசுப் பொருள்களில் பெரும்பாலானவை நித்தீஷிடம் ஏற்கனவே இருந்தன. பரிசுப் பொருள்களில் பல மறு பயனீடு செய்யப்பட்டவை என்பது கொடுத்தவர்களுக்கும் தெரியும், வாங்கினவர்களுக்கும் தெரியும். உசத்தியான உணவகத்தில் ஆர்டர் செய்த உணவை எல்லோரும் ஒரு கை பார்த்து விட்டுப் புறப்படும் போது, நித்தீஷ் அன்பளிப்புப் பொட்டலங்கள் வழங்கினான். அதற்காகவே காத்திருந்த பிள்ளைகள், உற்சாகமாகக் கும்மாளமிட்டன. உடனே பிரித்துப் பார்த்து, தன்னிடம் உள்ள பொருளைக் காட்டிலும் அடுத்த பிள்ளையிடம் உள்ளது அழகாய் இருப்பதாகக் கருதி அது போல ஒன்றும் வேண்டும் என்று சில அழத் துவங்கின.

ஒன்றுக்கே இந்தப் பாடு, இதில் இன்னொன்றா என்று எரிச்சல் வந்தாலும், 'சேச்சே குழந்தைதானே' என்று பொய்ப் பாசத்துடன், மனமின்றி விசாலாட்சி இன்னொரு அன்பளிப்புப் பொட்டலத்தை எடுத்துக் கொடுத்தாள். விசாலாட்சியின் கணவர் சிதம்பரம், இவற்றையெல்லாம் மவுன சாட்சியாகப் பார்த்துக் கொண்டிருந்தார்.

ஒரு வழியாக எல்லோரும் சென்றதும், வீடு புயல் அடித்து ஓய்ந்தது போலிருந்தது. உத்தேசமாகக் கணக்குப் போட்டுப் பார்த்ததில், கிட்டத்தட்ட ஆயிரம் வெள்ளிக்கு மேல் செலவாகி இருந்தது. ஊரில் இருந்தா இப்படிச் செலவு பண்ணத் தோன்றுமா என்ற எண்ணம் வந்தாலும், மற்றவர்கள் முன் தன் செல்வாக்கை நிலை நிறுத்த வேண்டும் என்ற எண்ணம் அதை அமுக்கியது.

இது நம்மில் பலரும் பார்த்த, அனுபவித்த காட்சிகள்.

இதனால் குழந்தைகளுக்கு ஏற்படும் பாதிப்பு :

- ❖ எவ்வளவு பரிசுப்பொருட்கள் கிடைத்தாலும் திருப்தி ஏற்படுவதில்லை.
- ❖ பேராசையைத் தூண்டுகிறது.
- ❖ சாதாரண நாட்களில் யார் வந்தாலும், தனக்கு என்ன கொண்டு வருவார்கள் என்னும் எதிர்பார்ப்பு ஏற்படும்.
- ❖ குழந்தைகளிடையே பொறாமை உணர்ச்சி வளர்கிறது.
- ❖ இதை விடப் பிரமாதமாக தங்களது பிறந்த நாளைக் கொண்டாட வேண்டும் என்ற ஆசை குழந்தைகள் மனதில் பிறக்கிறது.

பெற்றோருக்கான பாதிப்பு :

- ❖ விழாவிற்கு வருவோர் என்ன விலையில், எந்த அளவில் பரிசுகள் வாங்குவது என்று தலையைப் பிய்த்துக் கொள்வார்கள்.
- ❖ குழந்தையின் பெற்றோர், எதை, யார் கொண்டு வந்தார்கள் என்று ஒப்பிட்டுப் பார்த்து, தேவையற்ற கசப்புணர்வை வளர்த்துக் கொள்ள வாய்ப்புண்டு.
- ❖ குழந்தைகளுக்கு ஒரு சில நாட்களில், அத்தனையும் வெறுத்து விடுவதால் பிறகு அவற்றை எங்கே வைப்பது, அல்லது யார் தலையில் கட்டுவது என்பது போன்ற பிரச்னைகள் தலை தூக்கும்.

இதையெல்லாம் சீர் தூக்கிப் பார்க்கும் போது, நம் கலாச்சாரத்திற்கு இணங்க பிறந்தநாள் விழாவில் சில புதுமைகள் செய்தால் என்ன?

- ➢ குழந்தையை விளக்கேற்றி இறைவனை வணங்கச் சொல்லலாம்.
- ➢ பெற்றோரையும், பெரியவர்களையும் வணங்கி வாழ்த்துப் பெறச் செய்யலாம்.
- ➢ தமிழில் பிறந்த நாள் வாழ்த்துப் பாடலாம்.
- ➢ கப் கேக் வழங்கலாம்.
- ➢ விருந்தினர்கள், பத்து வெள்ளியைத் தங்கள் பெயர் குறிப்பிடாத உறையில் வைத்துப் பரிசுப் பெட்டியில் போடச் சொல்லலாம்.
- ➢ குழந்தைகள் விடைபெறும் போது அவரவர் வயதுக்கேற்ப தமிழில் கதைப் புத்தகங்களைப் பரிசாக வழங்கலாம்.
- ➢ மறுநாள், பரிசுப்பெட்டியில் உள்ள மொத்தப் பணத்தை எண்ணிப் பார்த்து, அதில் பாதியை அனாதை இல்லம் போன்ற இடத்துக்குச் சென்ற மனமுவந்து அளித்த பின்பு மீதித் தொகையில் தனக்குப் பிடித்த அல்லது தேவையானவற்றை வாங்கி கொள்ளலாம்.

இவை குழந்தைகளின் பணிவையும், மனத்திருப்தியையும், ஒழுக்கத்தையும், பகிர்ந்து வாழும் மனப்பாங்கையும், அளவோடும் சிக்கனமாகக செலவு செய்யும் பழக்கத்தையும் வளர்க்கும் என்று நீங்கள் நம்புகிறீர்களா? தங்களின் மேலான எண்ணங்களை ஆவலுடன் எதிர்பார்க்கிறோம்.

– முனைவர் க. ஐங்கரன்.



## *கட்டடக் கலையில் நகரத்தார்*

குடியிருக்கும் இடத்தைக்
கோயிலாக்கும் உணர்வு – வீட்டை
வடிவமைக்கும் போதே
வந்துவிட்ட நுண்ணறிவு.

மலைக்க வைக்கும் நிலைகள் – அதில்
மனம் கவரும் சிற்ப வேலைகள்.
நுழைவாயில் கதவுகளோ
நுட்பத்திற்கு உதாரணங்கள்.

பூட்டைத் திறக்கவும், கதவைத் தள்ளவும்
புதுத் தெம்பு வேண்டும் உடலில்.
புதிராகத் தோன்றும் பூட்டுக் குச்சிகள்,
புலப்படுவதோ சில நாட்களில்.

தாங்குகின்ற உத்தரமும், தேக்கு மரக் கைகளும்,
தூக்கி நிறுத்திய தூண்களும்
பிரம்மாண்டத்திற்கு உதாரணம்.
செட்டிநாட்டிலே இது சாதாரணம்.

சுவரின் வண்ணங்களும்,
சொக்க வைக்கும் ஓவியங்களும்
பார்ப்பதற்கு கண்கள் போதாது – அதன்
பளபளப்பு என்றும் மாறாது.

விசேஷங்கள் அனைத்தையும்
வீட்டிலே நடத்துவதற்காய் – குடியிருக்க
அரண்மனையைக் கட்டியது,
பழமையில் புதுமையைக் காட்டியது.

நம் முன்னோர்கள் நமக்காகக்
கட்டிக் கொடுத்தனர்.
நாம் நமது சந்ததிக்காக – இவற்றைக்
கட்டிக் காக்க வேண்டும்.

– சித. அருணாசலம்

## வாழ்க்கைக் கல்வி

படிப்பு மட்டுமே படிப்பு அல்ல!
பத்தும் இருக்கு கற்றுக் கொள்ள!
பயத்தை நீக்கு வெற்றி கொள்ள!
பல துறைகள் இருக்கு பங்கு கொள்ள!
போட்டிகள் நடத்துவார் பலர் இங்கே!
பொதுப்பணிகள் செய்திட அழைத்திடுவார்!

வாய்ப்புகள் வந்திடும் பொழுதெல்லாம்,
பாய்ந்து பற்றிக் கொள் - அது பயிற்சியாகும்.
தயக்கம் என்னும் தடை நீக்கு,
வளர்ச்சிக்கு அதுவே வழி வகுக்கும்.
தன்னம்பிக்கை நீ மிகக் கொண்டால்,
தலைமை உன்னைத் தேடி வரும்.
குழுவாய் உழைக்கப் பழகிக் கொண்டால்
எளிதில் வெற்றி தேடி வரும்.

**- ராம. வைரவன்.**

## இதர செய்திகள்:-

### 1) கூட்டுப் பிரார்த்தனை:-

அ) அருள்மிகு தெண்டாயுதபாணி கோயிலில் ஒவ்வொரு ஆங்கில மாதத்தின் முதல் சனிக்கிழமை தோறும் கூட்டுவழிபாடு நடைபெறும். இவ் வழிபாட்டில் நமது உறுப்பினர்கள் அதிக அளவில் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.
ஆ) அருள்மிகு தெண்டாயுதபாணி கோயிலில் ஒவ்வொரு ஆங்கில மாதத்தின் மூன்றாவது வெள்ளிக்கிழமை தோறும் தொண்டர் குழு சார்பாக பஜனை நடைபெறும். அதில் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

### 2) ஆண்டுச் சந்தா செலுத்துதல்:-

நகரத்தார் பெருமக்கள் சிலருக்கு தைப்பூசம் அல்லது பிள்ளையார் நோன்பு நேரங்களில் வேலைப்பளு காரணமாக கோவிலுக்கு வரமுடிவதில்லை. அத்தகையோர் சந்தாத் தொகையினை பிற நேரங்களில் செலுத்த விரும்பக் கூடும். சந்தாத் தொகையை காசோலையாக கீழே தரக்கட்டுள்ள முகவரிக்கு அனுப்பி வைக்கலாம்.

Nagarathar Association (Singapore),
15A Tank Road,
Singapore 238065

பணமாகச் செலுத்த விரும்புபவர்கள் ஒவ்வொரு மாதமும் முதல் சனிக்கிழமையன்று மாலை மணி 4.00 முதல் 8.00 வரை மேற்கண்ட முகவரியில் கவுரவப் பொருளாளர் அல்லது உதவிப் பொருளாளரிடம் பணத்தைச் செலுத்தி அதற்குரிய ரசீதைப் பெற்றுக் கொள்ளலாம்.

இதற்கு உதவுவதற்காகவே நமது பொருளாளர் சந்தாத்தொகை நிலுவையிலுள்ள எல்லோருக்கும் அவரவர்களுடைய விபர அறிக்கையை தனியாக தபால் மூலம் அனுப்பி வைத்திருக்கிறார். விபர அறிக்கையில் காண்பிக்கப்பட்ட தொகையை நீங்கள் ஏற்கனவே செலுத்தி இருந்தால்



உடனடியாக அவரைத் தொடர்பு கொண்டு (தொ.பே. — 9730 6174) தகுந்த சான்றுகளைக் காட்டி உங்கள் கணக்கினைச் சரி செய்து கொள்ளுங்கள்.

ஆண்டு தோறும் சந்தா செலுத்துவதைத் தவிர்க்க விரும்புவீர்களாயின், ஆயுள் சந்தாத் திட்டத்திற்கு மாற்றிக் கொள்ளலாம். ஒரே ஒரு முறை $200.00 (இருநூறு வெள்ளி மட்டும்) செலுத்தினால் போதுமானது. பிறகு எதுவும் செலுத்தத் தேவையில்லை. நடப்பு ஆண்டு 2005-க்கான ஆண்டுச் சந்தா ஏற்கனவே செலுத்தியவர்களும் ஆயுள் சந்தாத் திட்டத்தில் சேர முடியும். விரும்புபவர்கள் பொருளாளரை நேரடியாகத் தொடர்பு கொள்ளவும்.

**பின் குறிப்பு** . விபர அறிக்கை கிடைக்கப் பெற்றதுமே ஏப்ரல் மாதம் முதல் சனிக்கிழமை அன்றும், நகரவிருந்து அன்றும் பெருந்திரளானோர் நேரில் வந்து சந்தாத் தொகை செலுத்தினர். கணிசமானோர் தபாலிலும் அனுப்பி வருகின்றனர். அனைவருக்கும் எங்கள் நன்றி. இது போலவே மற்றவர்களும் அடுத்தடுத்த மாதங்களின் முதல் சனிக்கிழமைகளிலோ அல்லது தபால் மூலமோ கூடிய சீக்கிரம் செலுத்தி உதவ வேண்டுகிறோம்.

### 3) அறிவிப்புகள்:-

1) சென்ற இதழில் வெளியான செயற்குழு உறுப்பினர்களின் பட்டியலில் கடந்த ஆண்டின் தலைவர் திரு. பழ. அண்ணாமலை, கடந்த ஆண்டின் செயலாளர் திரு. ராம. நாராயணன், நடப்பு ஆண்டின் உறுப்பினர் திரு. சி. அடைக்கலவன் ஆகியோரது பெயர்கள் தவறுதலாக விடுபட்டு விட்டன. கவனக் குறைவால் ஏற்பட்ட தவறுக்கு வருந்துகிறோம்.

2) 2004-ம் ஆண்டில் PSLE, O-Level மற்றும் A-Level தேர்வுகளில் சிறப்பாகத் தேர்ச்சி பெற்ற மாணவ, மாணவியருக்கு (முதல் இரண்டு இடங்களுக்கு) இந்த ஆண்டு கலை விழா அன்று பரிசு வழங்கப் படும். ஆகவே மேற்கூறிய தேர்வு எழுதி வெற்றி பெற்ற மாணவ, மாணவியர் தங்களது மதிப்பெண் சான்றிதழ்களின் நகலை, பெற்றோர் பெயர், உறுப்பினர் எண் ஆகிய விபரங்களுடன் கீழ்க்கண்டவர்களின் முகவரிக்கு 14-06-05 க்கு முன் அனுப்புமாறு கேட்டுக் கொள்கிறோம்.

| | | |
|---|---|---|
| திருமதி. கஸ்தூரி ஐங்கரன் | Blk-102, Bukit Batok West Ave 6, #10-80, Singapore-650102. | 65650416 |
| திருமதி. ராதா அருணாசலம் | Blk-271, Toh Guan Road, #08-176, Singapore – 600271 | 65656324 |

# திருமணம் மற்றும் பிறப்பு

1. நம் உறுப்பினர், திரு எஸ். ராஜாமணி செட்டியார், திருமதி வள்ளிக்கண்ணு ஆச்சி ஆகியோரது மகன் திரு. ரா. ராமனாதன் என்ற ரமேஷிற்கும், கானாடுகாத்தானைச் சேர்ந்த குமாரி அழகு விசாலாட்சிக்கும் 23-01-05 அன்று பாகனேரியில் சிறப்பாகத் திருமணம் நடந்தேறியது. அவர்கள் வாழ்வில் எல்லா வளமும் பெற வாழ்த்துகிறோம்.

2. நம் உறுப்பினர், திரு வி. சொக்கலிங்கம் - திருமதி அகிலா தம்பதியினருக்கு 26-12-04 அன்று உமா என்கிற பெண் குழந்தை பிறந்துள்ளது. இம் மழலை நம் உறுப்பினர் திரு எஸ், விஸ்வநாதன் செட்டியார்-திருமதி கோதை ஆச்சி ஆகியோரது மகன் வழிப் பேத்தியுமாவாள். இம்மழலை சீரும் சிறப்புமாக வாழ வாழ்த்துகிறோம்.

3. நம் உறுப்பினர் திரு. நா. மெய்யப்பன் - திருமதி மீனாட்சி (L173) தம்பதியினருக்கு 15-10-04 அன்று நாச்சியப்பன் என்ற தண்ணீர்மலை என்கிற ஆண் குழந்தை பிறந்துள்ளது. இம் மழலை நம் உறுப்பினர் திரு பெ. சுப. சண்முகம் செட்டியார் - திருமதி விசாலாட்சி ஆச்சி (Y0124) ஆகியோரது மகன் வழிப் பேரனுமாவான். இம்மழலை சீரும் சிறப்புமாக வாழ வாழ்த்துகிறோம்.

## முகவரி மாற்றம்.

| Ref. No. Y0165 | VELLAYAPPAN RAJA | JEYAMANI |
|---|---|---|
| Blk-118B, #09-129, JALAN MEMBINA | | |
| SINGAPORE – 162118. | | |
| Ph: 62715129/ HP: 91544181, vellraja@yahoo.co.in. | | |
| Kittangi changed from 9 to 1A. | | |

| Ref. No. Y0306 | M. PALANIAPPAN | NACHI |
|---|---|---|
| Blk-297, #05-36, BUKIT BATOK STREET 22, | | |
| SINGAPORE – 650297. | | |
| Ph: 68960194/ HP: 91272434, | | |

| Ref. No. Y0026 | ARUN GANAPATHY CHOCKALINGAM | SWARNA |
|---|---|---|
| Blk-159, #10-1546, TOH PAYOH LORONG 1, | | |
| SINGAPORE – 310159. | | |
| Ph: 67260671/ HP: 90607042, arunganapathy@hotmail.com | | |

| Ref. No. Y0139 | A. NATARAJAN | BHARATHI |
|---|---|---|
| Blk-431, #08-575, CHOA CHU KANG AVE 4 | | |
| SINGAPORE – 680431. | | |
| Ph: 62199564/ HP: 90906312, nuty.2000@yahoo.com | | |

| Ref. No. L032 | VEERAPPAN. KR. | SUSEELA |
|---|---|---|



| | | |
|---|---|---|
| Blk-204A, #11-282, PUNGGOL FIELD | | |
| SINGAPORE – 120377. | | |
| Ph: 67740483/ HP: 91526738, susee74@singnet.com.sg | | |

| Ref. No. Y0005 | G. ALAGAPPAN | CHITRA |
|---|---|---|
| Blk-377, #04-308, CLEMENTI AVE 5 | | |
| SINGAPORE – 162118. | | |
| Ph: 62715129/ HP: 91544181, alagappan.govind@exxonmobil.com | | |

| Ref. No. Y0121 | NK.NACHIAPPAN | THENAMMAI @ SHAKUNALA |
|---|---|---|
| Blk-382, #10-119, JALAN MEMBINA | | |
| SINGAPORE – 520382. | | |
| Ph: 67837573/ HP: 97129167, murug@singnet.com.sg | | |

| Ref. No. | SHANMUGAM SIVARAMAN | SIVAGAMI |
|---|---|---|
| Blk-78, #10-585, COMMONWEALTH DRIVE, | | |
| SINGAPORE – 140078. | | |
| Ph: 64759661/ HP: 97625470, | | |

| Ref. No. L 0140 | SOMASUNDARAM MUTHAIAH | LAKSHMANAN RAJESWARI |
|---|---|---|
| Blk-319A, #04-76, ANCHORVALE DRIVE | | |
| SINGAPORE – 541319. | | |
| Ph: 64257483/ HP: 94314938, somukkdi@yahoo.com | | |

| Ref. No. Y0269 | RAMASUBBU S | VIMALA R |
|---|---|---|
| Blk-166, #12-1241, STIRLING ROAD, | | |
| SINGAPORE – 140166. | | |
| Ph: 64760462/ HP: 90128129. Ramasubbu_s@yahoo.com | | |

| Ref. No. Y0183 | R.S. RAMASAMY | UMAYAL @ MEENAKSHI |
|---|---|---|
| 437, Tanjong Katong Road, | | |
| Blk-A #04-03, KING'S MANSION, | | |
| SINGAPORE – 437147. | | |
| Ph: 63443125/ HP: 96313974. | | |
| Kittangi changed from 1A to 1B. | | |

| Ref. No. Y0390 | CHITSABESAN SENTHILKUMAR | VALLIAMMAI |
|---|---|---|
| Blk-865, #05-19, YISHUN STREEET 81, | | |
| SINGAPORE – 760865. | | |
| Ph: 68540404/ HP: 94517678. | | |

| Ref. No. Y0250 | ARUN MUTHAIAH | SANTHI NACHAMMAI |
|---|---|---|
| Blk-287, #09-72, YISHUN AVE 6, | | |
| SINGAPORE – 760287. | | |
| Ph: 67584843 H/P: 91830645, arunmuthuu@hotmail.com | | |

தொலைபேசி எண் மாற்றம்.

| | |
|---|---|
| R. SELLAPPAN @ MANI | Ph: 67429442 & 67422721 |
| | H/P: 92429656 |

மின் அஞ்சல் முகவரி மாற்றம்.

| |
|---|
| Y0216 - SINGARAM. R. & VALLIKKANNU.<br>Changed to “singaramn@yahoo.com” |

| |
|---|
| Y0169 – C. RAMANATHAN.<br>Changed to “cram19@rediffmail.com” |

| |
|---|
| ALAGAPPAN SHANMUGAM<br>Changed to “alagappansg@yahoo.com.sg” |

புது உறுப்பினர்கள்.

| Ref. No. Y0407 | SITHAMBARAM NACHIAPPAN |
|---|---|
| Kittangi No. | Union Energy Corporaton, |
| Mathur – Manalur | No. 12, DEFU LANE – 11 |
| VALAYAPATTI | Singapore 539168. HP – 94594303<br>nachi_jaya@yahoo.co.in |

| Ref. No. Y0408 | CHINNAKKARUPPAN RAMASAMY |
|---|---|
| Kittangi No. | Block 228, #03-31, Bukit Batok Central, |
| Vairavan Koil –<br>Periya Vakuppu | Singapore – 650228. |
| PUDUVAYAL | Ph. 65667445. HP. 98857953 |